**10.02.2023**

**அ.வ.எண். 115/2020 ல் இ.ம.எண்.2/20 ல் இ.ம.எண்.4/2021**

**ம.சா.2 காமாட்சி அவர்களின் குறுக்கு விசாரணை**

எதிர்மனுதாரரின் தந்தை பெயர் மொட்டையாண்டி கவுண்டர். அவர் 5 செண்டு நிலம் கிரையம் வாங்கினார் என்றால் இல்லை. மொட்டையாண்டி கவுண்டர் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவர் சென்னையில் இறந்துவிட்டார். அங்கிருந்து தாவா கிராமத்திற்கு கொண்டு வந்து அவரது இறுதி சடங்கை செய்தார்கள். எதிர்மனுதாரக்கு தாவா சொத்து தவிர வேறு சொத்து எதுவும் இல்லை என்றால் அவருக்கு ஏற்கனவே இருந்தது அதன் பிறகு நாங்கள் தான் அவரை காப்பாற்றி வருகிறோம்.

எதிர்மனுதாரர் சிறுவயதில் விதவையாகிவிட்டார் என்றால் சரிதான். அதன்பிறகு அவர் தனது தாய் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் அவர் சென்னைக்கு சென்றுவிட்டார். அவ்வப்போது தாவா சொத்திற்கு வருவார். தாவா சொத்தில் எதிர்மனுதாரின் தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்து என்றாலும் அவருக்கு பிறகு எதிர்மனுதாரர் அதை அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல.

1998ம் வருடம் தாவா சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்று

கிராமஊராட்சிதலைவரிடம் கேட்டால் தெரியும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அரசு தொகுப்பு வீடு கட்ட நாங்கள் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் வீடு கட்டுவது குறித்து எங்களுக்கு தெரியாது. எதிர்மனுதாரர் எனது உறவினர் என்பதால் நாங்கள் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அவருக்கு ஆதரவு இல்லாததால் நாங்கள் தான் வீடு கட்டிக்கொடுத்தோம்.

எதிர்மனுதாரர் வீடு கட்டுவதற்கு நான் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் எனது உறவினர் என்பதால் நாங்கள் விட்டுவிட்டோம். எதிர்மனுதாரர் வீடுகட்டுவதை நாங்கள் ஆட்சேபணை செய்யவில்லை என்று மனுதாரர் தனது பிராதுவில் சொல்லவில்லை என்றால் அவர் அப்போது சிறுவயதாக இருந்ததால் அவருக்கு தெரியாது. எதிர்மனுதாரர் விதவை என்பதால் அரசாங்கம் அவருக்கு தொகுப்பு வீடு வழங்கியது என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர் அப்போது வீடு கட்டியதால் தற்போது காலிசெய்யமாட்டேன் என்று கூறுகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கும் எனது கணவருக்கும் அரசாங்கத்தால் வீடு எதுவும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு வேறு ஒரு இடத்தில் ஒதுக்கப்பட்டது. எதிர்மனுதாரரின் வீட்டிற்கு எதிர்மனுதாரர் தான் வரிகட்டி வருகிறார் என்றால் நான் தான் வரிகட்டுகிறேன்.

தொகுப்பு வீடு கட்டியதிலிருந்து எதிர்மனுதாரர் தான் அனுபவித்து வருகிறார் என்றால் அவர் அங்கு வந்து சென்றுக்கொண்டிருப்பார். நாங்கள் எதிர்மனுதாரர் வீட்டை பூட்டிவிட்டதால் அவர் அச்சிறுப்பாக்கம் காவல் நிலையத்திலிருந்து காவலர்களை அழைத்து வந்து பூட்டை உடைத்து பிரச்சனை செய்தார். எதிர்மனுதாரர் வீட்டிற்கு சுமார் 10 வருடங்களாக பட்டா கோரி அவர் மனு செய்துள்ளார் என்றால் சரிதான்.

எதிர்மனுதாரருக்கு பட்டா வழங்கக்கூடாது என்று நாங்கள் ஆட்சேபணை தெரிவித்தோம் என்றால் சரிதான். நாங்கள் எதிர்மனுதாரர் வீட்டிற்கு பட்டா வழங்கக்கூடாது என்று தொடர்ந்து தடுத்து வருகிறோம் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் வீட்டிற்கு பட்டா கோரி நாங்கள் மனு தாக்கல் செய்துள்ளோம். எதிர்மனுதாரர் எங்கள் நிலத்தில் குடியிருக்கக்கூடாது என்று மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

நீதிமன்றத்தின் மூலம் எதிர்மனுதாரர் தாவா சொத்தினை காலி செய்ய வேண்டுமென்று நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது மகன் தவறான சங்கதிகளை கூறி வழக்கு தாக்கல் செய்து அதன்படி இடைக்கால உத்தரவு பெற்றதால் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் அனுபவத்தை அங்கிகரித்து தாவா சொத்திற்கு மின்இணைப்பு வழங்கலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் குடியிருக்கும் இடம் அவரது தகப்பனார் மொட்டையாண்டி கவுண்டர் கிரையம் வாங்கிய சொத்து என்றாலும் அதில் எதிர்மனுதாரர் சுமார் 40 வருடங்களாக வசித்து வருகிறார் என்றாலும் நாங்கள் 70, 80 வருடங்களாக அங்கு வசித்து வருகிறோம். எதிர்மனுதாரர் அவரது சொத்து என்று கூறி பிரச்சனை செய்து சுமார் 40 வருடங்களாக அங்கு இருந்து வருகிறார்.

வழக்கினை சீக்கிரம் முடிக்கவேண்டும் என்று தான் ஒருதலைபட்ச உத்தரவினை எதிர்த்து எதிர்மனுதாரர் எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றாலும் அவர் தான் தாவா சொத்தில் வசித்து வருகிறார் என்றாலும் எதிர்மனுதாரர் தான் தாவா சொத்தில் வம்பு செய்து வசித்து வருகிறார்.